திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் : திரு. M.P.அமித், இ.ஆ.ப.,

ந.க.எண்.எப்1/7316/2024/ம2 நாள். .02.2026.

பொருள் : மனைப்பிரிவு – திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் எண்.2 – தொட்டிபாளையம் கிராமம் – க.ச.எண்.314/8 மற்றும் 315/1 ல் 15358.00 ச.மீ. (3.79 ஏக்கர்) நிலப்பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்தல் – அனுமதி வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம், திருப்பூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.GMVKBL7F/2024/TCP நாள்.05.09.2024.
2. மாமன்ற தீர்மானம் எண். 171, நாள்.28.01.2026.

*****

உத்திரவு:

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.2, தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.314/8 மற்றும் 315/1 ல் 15358.00 ச.மீ. (3.79 ஏக்கர்) நிலப்பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தாங்கள் அனுமதி கோரி நகர் ஊரமைப்பில் விண்ணப்பித்திருந்ததின் பேரில், பார்வை 1ல் காணும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம், திருப்பூர் அவர்களின் நடவடிக்கைகளில் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR LPA/ LAYOUT No.69/2024 ல் தொழில் நுட்ப அனுமதியும் மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.69/2024 என எண்ணிட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ளவாறு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலகம், திருப்பூர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தொழில் நுட்ப ஒப்புதலின் படியும் மற்றும் திட்ட அனுமதியின் படியும் மனைப்பிரிவு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன், தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண். 314/8 மற்றும் 315/1 ல் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

2.2.26.

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்.

பெறுநர்:
திருமதி.R.ராணி, திரு.N.ராதாகிருஷ்ணன்,
க.எண்.17–18, KRE Layout, விநாயகபுரம் முதல் வீதி,
ராயபுரம், திருப்பூர்.

நகல்:
1. உதவிபொறியர் (நகரமைப்பு) மண்டலம் –2, திருப்பூர் மாநகராட்சி.
2. சார்பதிவாளர், தொட்டிபாளையம், திருப்பூர்,
   பத்திரபதிவு செய்ய தடையின்மை சான்று வழங்கப்படுகிறது.
3. இருப்பு கோப்பு.